அல்லது அமென்ட்மெண்ட்கள் இன்னின்ன லைனிலே இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மசோதாவை அடுத்து எடுத்துக் கொள்ளலாம். அடுத்த மசோதாவை இப்பொழுது எடுத்துக் கொள்வதற்கு பேரவையின் அனுமதி வேண்டியிருக்கிறது. ஆகவே, பேரவையின் அனுமதியுடன் அடுத்த மசோதாவை எடுத்துக் கொள்கிறேன்.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 38/72).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

(5) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/72).

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1972-ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட வரைவு * பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழி கிறேன்.

இச்சட்டவரைவை முன் மொழிகையில், 1956-ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின் மூலம் (மத்தியச் சட்டம் 37/1956) முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து இம்மாநிலத்திற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில்

---

* 19—8—1972-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.